Commercial Space for Rent
550 Square feet at first floor
Vijayanagar, Main Road, Velachery (Near Adyar Ananda Bhavan)
CONTACT 7305837388

# EXPRESS EV VELACHERY

Neighbourhood Newspaper - Weekly

*Free Circulation*

தை பொங்கல் சிறப்பிதழ் ~ 2021

FOR ADVERTISEMENT IN EXPRESS VELACHERY
Timing
Monday to Friday
9.30 am to 6.00 pm
Saturday
9.30 am to 12.30 pm
CONTACT
044- 42077325
7305837388

VOL - 3 ISSUE - 6 Editorial : 044-42077325 / 7305837388 email : expressvelachery@gmail.com

## அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டில் அசர வைத்த காளைகள்... ஆரவாரத்துடன் அடக்கிய வீரர்கள்

உலக புகழ்பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு நேற்று (சனிக்கிழமை) கோலாகலமாக நடைபெற்றது.

மதுரை மாவட்டத்தில் பாரம்பரிய வீரவிளையாட்டான ஜல்லிக்கட்டு பொங்கல் திருநாளை முன்னிட்டு கொண்டாடப்படுவது வழக்கம். உலக புகழ் பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு நேற்று (சனிக்கிழமை) காலை தொடங்கியது.

போட்டியை தொடங்கி வைப்பதற்காக முதல்- அமைச்சர், துணை முதல்-அமைச்சர் ஆகியோர் காலை 8.25 மணிக்கு வாடிவாசல் முன்புள்ள திடலுக்கு வந்தனர்.

அவர்களுக்கு விழாக்குழு சார்பில் உற்சாக வரவேற்பு கொடுக்கப்பட்டது. தொடர்ந்து அலங்காநல்லூர் முனியாண்டி கோவில் காளை அழைத்து வரப்பட்டது.

அதன் பிறகு வாடிவாசல் வழியாக காளைகள் ஒவ்வொன்றாக அவிழ்த்து விடப்பட்டன. இதனை அடக்க ஜல்லிக்கட்டு திடலில் திரண்டிருந்த காளையர்கள் மல்லுக்கட்டினர். சில காளைகள் களத்தில் நின்று விளையாடி வீரர்களை பந்தாடியது. இதேபோல் காளையர்களும் களத்தில் சுழன்று காளைகளின் திமிலை பிடித்து மடக்கினர்.

இந்த போட்டியை பார்ப்பதற்கு வசதியாக சுமார் 8 அடி உயரத்தில் 200 மீட்டர் நீளத்திற்கு இரும்பு தடுப்புகளுடன் காலரிகள் அமைக்கப்பட்டிருந்தன. அதில் இருந்தபடி பார்வையாளர்கள் காளையர்களை உற்சாகப்படுத்தி கொண்டிருந்தனர்.

சிறப்பாக காளைகளை பிடித்த வீரர்களை அவர்கள் உற்சாகப்படுத்தினர். மேலும் களத்தில் நின்று வீரர்களை அச்சுறுத்திய காளைகளுக்கும் சபாஷ் கொடுத்தனர். போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர்கள், பிடிபடாத காளைகளின் உரிமையாளர்களுக்கு கார், தங்க காசுகள், மோட்டார் சைக்கிள், சைக்கிள், பிரிட்ஜ், பீரோ, டி.வி., பித்தளை பாத்திரங்கள், நாற்காலிகள் என பல்வேறு பரிசுகள் வழங்கப்பட்டன.

முன்னதாக போட்டியில் பங்கேற்ற காளைகள் மருத்துவ பரிசோதனைக்கு பிறகே களத்தில் இறக்கப்பட்டன.

வீரர்களுக்கு கொரோனா பரிசோதனை செய்யப்பட்டு முக கவசம் அணிந்த பிறகே களத்தில் இறக்கப்பட்டனர். போட்டியில் பங்கேற்க 750 காளைகள், 550 காளையர்கள் தேர்வாகி இருந்தனர். மாடுபிடி வீரர்கள் சுற்று வாரியாக களத்தில் இறக்கப்பட்டனர். அவர்கள் ஆர்வத்துடன் களம் இறங்கி காளைகளை அடக்கினர்.

உலக புகழ் பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டில் பங்கேற்க திருநெல்வேலி, திண்டுக்கல் திருச்சி, ராமநாதபுரம், சிவகங்கை, தேனி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் மட்டுமின்றி இலங்கை உள்ளிட்ட வெளி நாடுகளில் இருந்தும் காளைகள், லாரி, வேன்களில் கொண்டு வரப்பட்டிருந்தன. அவைகளும் களத்தில் நின்று விளையாடி பரிசுகளை தட்டிச்சென்றன. உலகப் புகழ்பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு நடைபெறும் இந்த மண் அனைவராலும் பாராட்டப்படக்கூடிய மண்ணாகும். சீறி வருகின்ற காளைகளை அடக்குகின்ற இளைஞர்கள் பட்டாளம் நிறைந்த இந்த ஜல்லிக்கட்டு விழா உலகப் புகழ்பெற்ற விழா என்று சொன்னால் அது மிகையாகாது. உலக மக்கள் அனைவரும் காணக்கூடிய இந்த வீர விளையாட்டை, நம்முடைய கலாச்சார பண்பாட்டை, பாரம்பரியம் மிக்க பண்பாட்டைக் காக்கக் கூடிய ஜல்லிக்கட்டு விளையாட்டு மிகச் சிறப்பாக நடைபெற்றது.

RichLook Feels
STYLISH BEAUTY PARLOUR & ACADEMY
Join Our 'Government Of India Certified' Professional Beautician Course and Become an Entrepreneur!
எங்கள் 'இந்திய அரசின் சான்றிதழ்' பெற்ற ஒப்பனையாளர் மற்றும் அழகுக்கலை பயிற்சியில் பங்கேற்கவும், ஒரு சுயதொழில் ஒப்பனை கலைஞர் ஆகவும் !

Female Candidates Only
Basic Course Fee : 20,000/- (1 Month)
Advanced Course Fee : 30,000/- (45 Days)
For New Year & Pongal Offer 20% Discount
Beautician Training Admission Started HURRY UP ! HURRY UP ! HURRY UP !
COURSE TOPICS:
Threading
Bleach
Facial
Manicure
Waxing
Oil Massage
Dandruff Treatment
Makeup
Henna Conditioning
Advance Hair Cuts
Hair Style
Saree Draping
Hair Ironing
Hair Tongs
Mehandi Designing
For Enquiry :
7092240806
9094809428
9094809429
Address :
Sree Ramana Vijay Apartment, Flat E, 31B, 6th Main Road, Ram Nagar North Extn. Velachery, Chennai - 42. (LandMark Near Mahindra ShowRoom)

WANTED
Required Marketing Executive for Express Velachery, as part time or full time


SILOAM PHYSIOTHERPY CLINIC
We relieve your pain with non-invasive, Non-surgical safe and effective management
+ Low back ache
+ Knee pain
+ Wrist pain
+ Ankle pain
+ Strain & sprains
+ Neck pain
+ Shoulder pain
+ Arthritis
+ Sports injuries
+ Neurological Disorders

10% off on physiotherapy packages
Dr. D. Clement
M.P.T (Ortho), MIAP, (Consultant Physiotherapist)
Book your physio session now !
Call us
9884313185 / 9841333185 / 9884638757
Head Office: No.47-C, 1st Floor, Velachery Main Road, (Near Velachery Police Station) Velachery, Chennai - 600042.
Branch: No. 178, Velachery Main Rd, Jeeva Nagar Extn., Pallikaranai, Chennai-600100. (Near Aishwarya Thirumana Mahal)


முப்பிடாரி முத்துமாலை அம்மன் துணை
பத்ரகாளி அம்மன் துணை
ஸ்ரீ தேவி நாடார் திருமண தகவல் மையம்
வாருங்கள் இணைப்போம்!

திருமண மேளம் முழங்கிட செய்வோம்!
இந்து நாடார் இன மணமகன் - மணமகளின் பெற்றோர் விருப்பத்திற்கேற்ப பொருத்தமான நல்ல வரன்களின் ஜாதக தகவல்களை தந்து, சேவை கட்டணம் பெறும் கைராசியான திருமண தகவல் மையம். பதிவு கட்டணம் 1000/- மட்டுமே உள்நாட்டில் பணிபுரியும் டாக்டர்கள், இன்ஜினியர்கள் மற்றும் வியாபாரிகளின் ஜாதகங்கள் மட்டுமின்றி வெளிநாட்டில் பணிபுரிபவர்களின் ஜாதகங்களை பற்றிய தகவல்களும் இவ்விடம் கிடைக்கும்.
அமைப்பாளர்கள் :
A. பிருந்தாதேவி
G. செல்வி
9841638387
9791370555
9080840288

*நீதிக் கதைகள்*

# இரண்டு முட்டாள் ஆடுகள்

அது ஒரு அடர்ந்த காடு. அந்த காட்டின் நடுவே ஒரு குறுகிய பாலம் ஒன்று ஆற்றின் நடுவில் இருந்தது. ஒரு நாள் அந்த பாலத்தை கடப்பதற்காக இரண்டு ஆடுகள் பாலத்தின் அருகில் வந்து கொண்டு இருந்தன.
ஒரு ஆடு பாலத்தின் ஒரு முனையிலும் மற்றொன்று மறுமுனையிலும் வந்து நின்றன.




அந்த பாலத்தை ஒரே நேரத்தில் ஒருவர் மட்டுமே கடக்க முடியும். இது தெரிந்தும் இரண்டு ஆடுகளும் பாலத்தை கடப்பதற்காக ஒரே நேரத்தில் ஏறி பாலத்தின் நடுவில் வந்து நின்றன.




இப்படியே இரண்டு ஆடுகளும் விட்டுக் கொடுக்காமல் சண்டையிடத் தொடங்கின.

சண்டையிடும் போது இரண்டு ஆடுகளின் கால்களும் பிடிமாணம் இன்றி ஆற்றில் விழத்தொடங்கின.
ஆற்றில் விழுந்தவுடன் இரண்டு ஆடுகளும் தங்கள் செய்த தவறை நினைத்து வருந்தின.
இறுதியில் இரண்டு ஆடுகளும் நீரில் மூழ்கி இறந்தன.



நீதி: விட்டுக் கொடுக்க வேண்டிய நேரத்தில் கண்டிப்பாக விட்டுகொடுக்க வேண்டும்.

---

தெரிந்துக்கொள்வோம்...

## நம் முன்னோர் சொல்லி வைத்த உண்மைகள்!

**சி**த்திரை 1, ஆடி1, ஐப்பசி 1, மற்றும் தை 1... இவற்றையெல்லாம் விழாவாகக் கொண்டாடுவது, ஏதோ ஒரு சடங்கு, பழக்கம் என நினைத்துக் கொண்டுள்ளோம். ஆனால் இதற்குள் மிகப்பெரிய அறிவியலை வைத்துள்ளனர், நம் முன்னோர்கள்.

'சூரியன் உதிக்கும் திசை கிழக்கு' என்று, சிறுபிள்ளைகளுக்கு சொல்லி தருகிறோம். என்றாவது ஒரு அளவை வைத்து சூரியன் உதிக்கும் போது சோதித்து இருக்கிறோமா என்றால், கண்டிப்பாக இல்லை.

நாம் அறிவியலை அழித்து, முட்டாள்தனமாக கல்வியை, வெள்ளையர்கள் புகுத்தி விட்டனர் என்பதற்கு, இதுவும் ஒரு சான்றாகும். சூரியன், ஒரு குறிப்பிட்ட நாளில் மட்டுமே சரியாக கிழக்கே உதிக்கும். பின் கொஞ்சம் கொஞ்சமாக வடகிழக்கு நோக்கி நகர்ந்து, ஒரு குறிப்பிட்ட புள்ளியில் நின்று. மறுபடியும் தெற்கு நோக்கி திரும்பும். அதன் பின் மறுபடியும் ஒரு நாள், கிழக்கே உதிக்கும். அப்புறம் தென் கிழக்கு நோக்கி நகரும்.

கிழக்கில் ஆரம்பித்து, வடகிழக்கு, தென்கிழக்கு போய் மறுபடியும் கிழக்கிற்கு வர ஆகிற நேரம், சரியாக ஒரு ஆண்டு.

சரி... இதுக்கும் தமிழ் மாதங்களுக்கும் என்ன சம்பந்தம்?

சூரியன் தன் பயணத்தை கிழக்கில் ஆரம்பிக்கும் நாள் தான், சித்திரை -1 தமிழ் புத்தாண்டு. அப்புறம் சரியாக வடகிழக்கு புள்ளிதான், ஆடி -1 ஆடிப்பிறப்பு. மறுபடியும் கிழக்கு நோக்கி வரும்பொழுது ஐப்பசி -1 தீபாவளி. மீண்டும் சரியாக தென்கிழக்கு, தை -1 பொங்கல்.

வானியல் மாற்றங்களையும் அதை சார்ந்த பருவகாலம் மாற்றங்களையும் நன்கு உணர்ந்திருந்த நம் முன்னோர்கள் இவற்றை அனைவரும் அறியும் வகையில் தான் திருவிழாவாக கொண்டாடினர்.

அடுத்த தலைமுறைக்கு நம் பாரம்பரியத்தை வெறும் சடங்காக மட்டும் அல்லாமல் அதில் மறைந்துள்ள அறிவியலையும் எடுத்து சேர்ப்போம்.

## சென்னையில் தங்கம் மற்றும் வெள்ளி விலை நிலவரம்

| | 22 கேரட் | 24 கேரட் |
|---|---|---|
| தங்கம் விலை - | 1 கிராம் ₹ 4,754 | 1 கிராம் ₹ 5,186 |
| | 8 கிராம் ₹ 38,032 | 8 கிராம் ₹ 41,488 |
| வெள்ளி விலை - | 1 கிராம் ₹ 73.10 | |
| | 1 கிலோ ₹ 73,100 | |

## திருக்குறள்

**தமிழ்**

**8. அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்**
**பிறவாழி நீந்தல் அரிது.**


**English**

**Unless His feet 'the sea of good, the Fair and Bountiful,' men gain, 'Tis hard the further bank of being's changeful sea to attain.**

## ஜனவரி -19 முதல் பள்ளிகள் திறப்பு

**கொ**ரோனாவால் ஏறத்தாழ 9 மாதங்களுக்கு மேலாக பள்ளிகள் திறக்கபடாத சூழ்நிலையில் தற்போது தமிழகத்தில் கொரோனா பரவல் குறைந்துள்ளதை அடுத்து ஜனவரி 19-ஆம் தேதி முதல் 10 மற்றும் 12-ஆம் வகுப்புகளுக்கு பள்ளிகள் திறக்கப்படும் என்று தமிழக முதல்வர் அறிவித்துள்ளார். இதற்கு முன்பாக பள்ளிகள் திறப்பது தொடர்பாக பெற்றோர்களிடம் கருத்து கணிப்பு கேட்புக் கூட்டம் நடைபெற்றது. இதில் பங்கேற்ற பெரும்பாலான பெற்றோர் பள்ளிகளைத் திறக்க விருப்பம் தெரிவித்திருப்பதாக தகவல்கள் வெளியான நிலையில், பொங்கல் விடுமுறை முடிந்து ஜனவரி 19-ஆம் தேதி செவ்வாய்க்கிழமை முதல் தமிழகத்தில் 10 மற்றும் 12-ஆம் வகுப்பு மாணவர்களுக்கு மட்டும் பள்ளிகள் செயல்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது. ஒரு வகுப்பறைக்கு 25 மாணவர்களுக்கு மிகாமல் பள்ளிகளை இயக்க தமிழக அரசு அறிவுறுத்துள்ளது. மேலும், பள்ளி மாணவ, மாணவிகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க வைட்டமின் மாத்திரைகள் மற்றும் துத்தநாக மாத்திரைகள் வழங்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. கொரோனா விதிமுறைகளை கடைப்பிடிக்க பள்ளி ஆசிரியர்களுக்கு, மாணவர்களுக்கு, பெற்றோர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**சென்னையில் பெட்ரோல், டீசல் விலை நிலவரம்**

|  |  |
|---|---|
| பெட்ரோல் விலை | டீசல் விலை |
| விலை 1 லிட்டர் | விலை 1 லிட்டர் |
| ₹ 86.96 | ₹ 79.72 |

வீடு, மனைகள் விற்பனை
மற்றும் வீடு வாடகை
இவைகள் நமது
எக்ஸ்பிரஸ் வேளச்சேரி
இதழில் விளம்பரம்
செய்வதற்கு
250/- மட்டும்.

## யோகாசனம்

**சசாங்காசனம்**



சசாங்காசனத்தின் பயன்கள்:-

- இடுப்பின் எலும்புகள், தசைகள், நரம்புகள் வலுப்பெறும்.
- அட்ரீனல் சுரப்பி நன்கு செயல்படும்.
- கோபம் கட்டுப்பாட்டில் இருக்கும்.
- மலச்சிக்கல் நீங்கும்.
- வயிற்றிலுள்ள உறுப்புக்களும், சுரப்பிகளும் சீராக இயங்க ஊக்குவிக்கிறது.
- பெண்களின் இடுப்பெலும்பு நன்கு வளர்ச்சியடைய உதவுகிறது.
- சுவாச கோளாறுகளுக்கு பயனுள்ளது.

# இந்த வார ராசிபலன்



**மேஷம்**
உங்கள் முன்னேற்றம் வேகமாக இருக்கும். நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள். செலவுகள் அதிகமாக இருக்கும். ஆனால் வருமானம் போதுமான அளவில் இருக்கும்



**துலாம்**
உங்கள் தொழில் வாழ்க்கையில் நீங்கள் வெற்றியைப் பெறுவீர்கள் மற்றும் நீங்கள் விரும்பும் இலக்குகளை அடைய முடியும். பொருளாதார ரீதியாகவும் நீங்கள் நிலையானதாக உணருவீர்கள்.



**ரிஷபம்**
தொழில் ரீதியாக ஒரு சிறந்த நேரத்தை செலவிடுங்கள், நீங்கள் விரும்பத்தக்க முடிவுகளைப் பெற முடியும் மற்றும் இந்த நேரத்தில் உங்களிடம் பணம் இருக்கும், முதலீட்டிலிருந்து நல்ல பலன் பெறுவீர்.



**விருச்சிகம்**
பணித்துறையில் வெற்றி கிடைக்கும். உங்கள் செலவுகள் அதிகரிக்கக்கூடும். நண்பர்கள், உறவினர்கள் மற்றும் உடன் பிறப்புகளிடமிருந்து உங்களுக்கு நிறைய ஆதரவு கிடைக்கும்.



**மிதுனம்**
உங்கள் உடல்நலம் குறித்து நீங்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும், உங்கள் பணி முன்னேற்றம் மெதுவாக இருக்கும் மற்றும் உங்கள் மேலதிகாரிக -ளுடன் சிக்கல்களை சந்திக்க நேரிடும்.



**தனுசு**
இந்த நேரத்தில் நீங்கள் பணம் மற்றும் பொருள் பாதுகாப்பில் கவனம் செலுத்துவீர்கள். இந்த நேரத்தில் நீங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்க -ளிடமிருந்து மரியாதை பெறுவீர்கள்.



**கடகம்**
தொழில் முறையில் முன்னேற்றம் அடைவதில் நீங்கள் சில சிக்கல்களை சந்திக்க நேரிடும். இந்த நேரத்தில் கவலைகள் நீடிக்கக்கூடும். நீங்கள் மத வழிபாட்டில் ஈடுபடுவது நல்லது.



**மகரம்**
இந்த நேரத்தில் உங்கள் நம்பிக்கை மிக அதிகமாக இருக்கும். உங்கள் இலக்குகளை அடைய இது ஒரு நல்ல நேரம். இந்த நேரத்தில் நீங்கள் செல்வத்தையும் குவிக்கலாம்.



**சிம்மம்**
பணித்துறையில் நீங்கள் எச்சரிக்கை -யாக இருக்க வேண்டும். தேவையற்ற பயமும் பதட்டமும் நீடிக்கும். வயிற்று பிரச்சினை போன்றவற்றை வரலாம். ஆரோக்கியதில் கவனம் செலுத்துங்கள்.



**கும்பம்**
நீங்கள் சில சிறிய நிதி சிக்கல்களையும் சந்திக்க நேரிடும். விவாதத்தை தவிர்ப் -பது நல்லது. நம்பிக்கையற்ற உணர்வு உங்கள் எண்ணங்களை சிதைக்கும். சில கண் பிரச்சினைகளும் ஏற்படும் .



**கன்னி**
உங்கள் வேலையில் உற்சாகமாகவும் மற்றும் மகிழ்ச்சியாகவும் உணருவீர்கள். உங்கள் வாழ்க்கையில் அன்பும் பாசமும் நிறைந்ததாக இருக்கும். நீங்கள் ஆரோக்கியமாகவும் உணருவீர்கள்.



**மீனம்**
நீங்கள் பணித்துறையில் சிக்கல்களை சந்திக்க நேரிடும். இருப்பினும், பொருளாதார பக்கத்தில் சில முன்னேற்றங்கள் இருக்கலாம் மற்றும் நீங்கள் கடன்களிலிருந்து விடுபடலாம்.

## ஆன்மீக பகுதி

### அரசமர இலையின் இறைவழிபாடு

சூரிய உதயத்திற்கு முன்பாக எழ வேண்டும். உங்கள் வீட்டிற்கு அருகில் எங்கேயாவது அரசமரம் இருந்தால், அந்த அரசமரம் இருக்கும் இடத்திற்கு நீங்கள் சென்று, சிவபெருமானை வேண்டி அந்த மரத்திலிருந்து மூன்று இலைகளைப் பறித்துக் கொள்ள வேண்டும்.

முடிந்தால் அந்த மரத்தடியிலேயே அமர்ந்து இந்த 3 இலைகளை உங்கள் வலது உள்ளங் கைகளில் வைத்துக் கொண்டு, சிவ பெருமானை நினைத்து 'ஓம் நமசி வசி' என்ற மூன்று வார்த்தை கொண்ட இந்த மந்திரத்தை உச்சரிக்க வேண்டும். முடியாதவர்கள் முந்தைய நாளே அரச இலைகளை உங்கள் வீட்டுக்கு எடுத்து வந்து வைத்துக் கொள்ளலாம்.

காலையில் எழுந்து சுத்தபத்தமா குளித்து முடித்துவிட்டு, உங்கள் பூஜை அறையில் தீபம் ஏற்றி வைத்துவிட்டு, இந்த அரச இலைகளை உங்கள் கைகளில் வைத்துக் கொண்டு, 'ஓம் நமசி வசி' என்ற மந்திரத்தை 108 முறை உச்சரித்தாலும் தவறு கிடையாது. வீட்டிலும் இந்த பரிகாரத்தை தாராளமாக செய்யலாம்.

இதை பரிகாரம் என்று சொல்வதைவிட, முழுமையான இறைவழிபாடு என்று தான் சொல்ல வேண்டும். முழு நம்பிக்கையோடு அரச இலைகளை உங்கள் கையில் வைத்துக் கொண்டு, எல்லாம் உங்கள் வசம் ஆகவேண்டும் என்று எம்பெருமானை வேண்டிக்கொண்டு, இந்த மந்திரத்தை உச்சரிப்பவர்களுக்கு வெற்றி நிச்சயம் உண்டு. எதிர்காலத்தில் அரச வாழ்வு கிடைப்பதற்கு கூட நிறையவே வாய்ப்பு உள்ளது. இந்த வழிபாட்டினை இத்தனை நாட்கள் தான் செய்யவேண்டும் என்ற எந்த அவசியமும் கிடையாது. தினமும் கூட செய்து வரலாம்.

முக்கியமான வேலைகளுக்கு நீங்கள் செல்லும் நேரங்களில், இந்த மந்திரத்தை உச்சரித்து, உரு ஏற்றி வைத்திருக்கும் அந்த இலையை, உங்களுடன் கொண்டு போனால் நீங்கள் செல்லும் காரியம் தடைபடாமல் நடக்கும். நம்பிக்கையுள்ளவர்கள் நம்பிக்கையோடு செய்து பலன் அடையுங்கள்.

# தமிழர் திருநாளான தை பொங்கலின் சிறப்புகள்

*தை பொறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். தமிழ் மாதங்களில் தனிச் சிறப்பு வாய்ந்த மாதங்களில் முக்கியமானது தை.*

**தை** மாதத்தின் பிறப்பை அறுவடைத் திருநாளாக, பொங்கல் தினமாக உலகத் தமிழினம் கொண்டாடி வருகிறது. தமிழ்ப் புத்தாண்டின் முதல் நாளாகாவும் இந்த நாள் ஆரம்பத்தில் கொண்டாடப்பட்டது. இஐடயில் சித்திரைக்கு மாறிப் போனது. இப்போது மீண்டும் தை முதல் நாளை புத்தாண்டின் முதல் நாளாக கொண்டாடப்படுகிறது.

**தமிழர் திருநாள்:**

தைப் பொங்கல், அறுவடைத் திருநாள் என கூறப்படும் பொங்கல் பண்டிகை, தமிழர் பண்டிகை ஆகும். பொங்கல் என்பதற்கு சாப்பிடும் பொங்கல் என்று பொருள் அல்ல. பொங்கிப் பெருகி வருவது என்று பொருள். தமிழர்கள் இருக்குமிடம் பொங்கல் விசேஷமாக கொண்டாடப் -படுகிறது. தமிழர்களின் தாயகமான தமிழ்நாட்டில் வெகு விமரிசையாக கொண்டாடப்படும். பொங்கல் பண்டிகை, மலேசியா, கனடா, சிங்கப்பூர், இலங்கை, மொரீஷியஸ் அனைத்து உலக நாடுகளிலும் விமரிசையாக கொண்டாடப்படுவது வழக்கம். மலேசியா, இலங்கை உள்ளிட்ட சில நாடுகளில் பொங்கல் பண்டிகையன்று அரசு விடுமுறையும் கூட விடுகிறார்கள்.

**பொங்கல் பண்டிகையின் தோற்றம்:**

2000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இது கொண்டாடப் -படுகிறது என்று கூற்று உள்ளது. சோழர் காலத்தில் பொங்கல் பண்டிகைக்கு புதியீடு என்று பெயர் இருந்தது. அதாவது, ஆண்டின் முதல் அறுவடை என்று அதற்குப் பொருள். உழவர்கள் தை மாதத்தின் முதல் நாளில், அந்த ஆண்டின் முதல் அறுவடையை மேற்கொள்வது வழக்கமாக இருந்தது. இதுதான் பின்னர் பொங்கல் பண்டிகையாக மாறியது என்கிறார்கள்.

**பொங்கல் பண்டிகையின் 4 நாள் விழா கொண்டாட்டம்:**

பொங்கல் பண்டிகை மொத்தம் 4 நாட்களுக்கு கொண்டாடப் படுகிறது. முதல் நாள் போகி பண்டிகை பழையை பொருட்களை வீட்டின் முன்பு வைத்து தீயிட்டு கொளுத்தி அல்லவை அழிந்து நல்லவை வரட்டும். பழையன கழிதலும், புதியன புகுதலும் என்ற மொழிக்கேற்ப போகி பண்டிகை கொண்டாடப்படுகிறது. அடுத்த நாள் 2வது நாளான பொங்கல், விசேஷமானது. தை மாதப் பிறப்பு நாள் இது. சர்க்கரைப் பொங்கல் என்று இந்த பண்டிகைக்குப் பெயர். வீட்டுக்கு வெளியே சூரியன் இருக்கும் திசையை நோக்கி இந்த பொங்கலிடும் நிகழ்ச்சி நடைபெறும். நன்கு பொங்கி வந்தால் அந்த ஆண்டு முழுவதும் நல்ல வளமும், நலமும் நிலவும் என்பது ஐதீகம். 3வது நாள் மாட்டுப் பொங்கல். நமக்கு காலமெல்லாம் கை கொடுத்து உதவும் மழை, சூரியன், விவசாயத்திற்குப் பயன்படும் கால்நடைகள் ஆகியவற்றுக்கு நன்றி கூறும் நல் வாய்ப்பாக இந்த திருநாள் கொண்டாடப்படுகிறது. நான்காவது நாள் காணும் பொங்கலாக கொண்டாடப்படுகிறது. அதாவது உற்றார், உறவினர், நண்பர்களைக் கண்டு வாழ்த்துக் -களையும்,இனிப்புகளையும் பரிமாறிக் கொள்ளும் நாளாக கொண்டாடப் -படுகிறது. சுற்றுலாத் தலங்களுக்கும், பொழுதுபோக்கு இடங்களுக்கும் இந்த நாளில் போவது வழக்கம்.

**ஜல்லிக்கட்டு பொங்கல்:**

பொங்கல் பண்டிகையின்போது ஜல்லிக்கட்டு விசேஷமானவை. அலங்காநல்லூர், பாலமேடு, காஞ்சரம்பேட்டை ஜல்லிக்கட்டுக்கு பெயர் போனவை. இதில் அலங்காநல்லூர் உலகப் புகழ் பெற்ற ஜல்லிக்கட்டு களமாகும்.

*தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகையை தமிழ்ப் புத்தாண்டாகவும் அனைவரும் கொண்டாடி மகிழ்கின்றனர்.*

## பொன்மொழிகள்

நீ வெற்றிக்காக போராடும்போது வீண் முயற்சி என்று சொல்பவர்கள் நீ வெற்றி பெற்ற பின் விடாமுயற்சி என்பார்கள்.

- கவியரசர்

### தத்தராய ராமச்சந்திர கப்ரேக்கர் (Dattaraya Ramchandra Kaprekar)

பிறந்த தினம் **இன்று**! (ஜனவரி - 17, 1905)



தத்தராய ராமச்சந்திர கப்ரேக்கர் 1905-ஆம் ஆண்டு ஜனவரி 17 ஆம் நாள் மஹாராட்டிர மாநிலத்தில் மும்பைக்கு அருகிலுள்ள தகானு என்னுமிடத்தில் பிறந்தார். இராமச்சந்திரதேவ கப்ரேக்கர் - ஜானகிபாய் இணையருக்கு இளைய மகனாகப் பிறந்தார். இவர் ஓர் இந்தியக் கணிதவியலாளர்.

1908 -ல் தாணேயிக்கு சென்று அங்குள்ள பள்ளியில் ஆரம்பக் கல்வி மற்றும் உயர்நிலைப் பள்ளிக் கல்வி பயின்றார். பள்ளிப் படிப்பை முடித்தபின், 1929 -ல் பம்பாய் பல்கலை கழகத்திலிருந்து இளங்கலை அறிவியல் பட்டம் பெற்றார். 50 ஆண்டுகளுக்கு மேலாக எண்கள்பால் ஈடுபாடு கொண்டு கணிதத்தில் ஆராய்ச்சி செய்தார். எண்ணியலில் இவர் பல கண்டுபிடிப்புகளை நிகழ்த்தினார். கப்ரேக்கர் மாறிலி, கப்ரேக்கர் எண் ஆகியவை இவரது கண்டறிதல்கள். முதுகலைப் பட்டம் பெறாதிருந்தும் இவர் எண்ணியலில் பல கட்டுரைகளையும் துண்டுப் பிரசுரங்களையும் வெளியிட்டார். இவரது பல எண்ணியல் வித்தைகள் விளையாட்டுக் கணிதத்தில் இன்று பயன்படுகின்றன.

# Chutties Corner


## BIRTHDAY WISHES


G.V. Nithish
January 11


P. Sudeesh Ramdoss
January 16



Nithyashree
January 17

## Paper Crafts



## தனித்திறமை பகுதி

### DRAWING







B.R.Vaibhav,
Saidapet


Rachel

## வண்ணம் தீட்டுக




☆ ☆ ☆ ☆ ☆
5 star ratings from your parents

### CHRISTMAS TREE & COTTAGE DECORATION


Mary veronica

உங்கள் வீட்டு குழந்தைகளின் திறமைகளை வெளிப்படுத்த, அவர்களின் ஓவியம், கைத்திறம், கோலம் மற்றும் கவிதைகளை அவர்களின் புகைப்படத்தோடு சேர்த்து வாட்சப் அல்லது மெயில் மூலம் எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.

## பாதை விளையாட்டு



குரங்கு, வாழைப்பழத்தை உண்பதற்கு, குரங்கிற்கு வழி காட்டி உதவுங்கள் குட்டிஸ்!

படத்தில் உள்ள 6 வித்தியசங்களை கண்டுபிடியுங்கள்...!



Find
6
Differences
?


HOTEL NESTLE INN

LUXURY A/C ROOMS

A/C ROOMS AVAILABLE



good night guaranteed...
For Booking : 044 48600206
Mobile & Whatsapp : 91763 28128

No. 37F, Velachery Main Road,
Vijaya Nagar, Velachery - 600 042.

# தடுப்பூசி போட்டுக்கொள்வது கட்டாயம் அல்ல

**கொ**ரோனா தடுப்பூசி போட்டுக்கொள்வது கட்டாயம் அல்ல எனவும், தாங்களாக முன்வருபவர்களுக்கே தடுப்பூசி போடப்படும் என்று தமிழக சுகாதாரத்துறை செயலர் தெரிவித்துள்ளார்.


மஹாராஷ்டிரா மாநிலம் புனேயில் இருந்து 5.56 லட்சம் டோஸ்கள் கொண்ட சீரம் நிறுவனத்தின் கோவிஷீல்டு கொரோனா தடுப்பு மருந்துகள் தமிழகத்திற்கு வரவுள்ளது.

இது குறித்து தமிழக சுகாதாரத்துறை செயலர் செய்தியாளர்களிடம் கூறியது முதல் கட்டமாக சீரம் நிறுவனத்தின் 5,56,500 கோவிஷீல்டு தடுப்பு மருந்துகளும், பாரத் பயோடெக்கின் 20 ஆயிரம் கோவாக்சின் தடுப்பு மருந்துகளும் தமிழகம் வரவுள்ளது. ஒருவருக்கு 30 நாள் இடைவெளியில் 2 முறை தடுப்பூசி போடப்படும். மருத்துவர்கள், செவிலியர்கள் உள்ளிட்டோருக்கு முதலில் தடுப்பூசி செலுத்தப்படும். கோவிஷீல்டு, கோவாக்சினை யார் யாருக்கு எந்த தடுப்பூசிகளை போடுவது என்பது பற்றி இதுவரை முடிவு செய்யவில்லை. தடுப்பூசி தொடர்பாக மத்திய அரசு தொடர்ந்து வழிகாட்டு நெறி முறைகள் வழங்கி வருகிறது. புனேயில் இருந்து சென்னை விமான நிலையத்திற்கு கொரோனா தடுப்பு மருந்து வருகிறது. அங்கிருந்து 10 மையங்களுக்கு அனுப்பப்படும். தடுப்பூசி போட்டுக்கொள்வது கட்டாயம் அல்ல, தாங்களாக முன் வருபவர்களுக்கே தடுப்பூசி போடப்படும். ஏன்று தமிழக சுகாதாரத்துறை செயலர் தெரிவித்துள்ளார்.

## சுடோக்கு விளையாட்டு


குறுக்குக் கூட்டு சுடோக்குப் புதிர்

*கட்டத்தில் உள்ள சிறிய எண் மற்றும் நிறங்களுக்கு ஏற்ப (எண்) விடையைக் கண்டுபிடியுங்கள்.*







## உலகிலேயே சிசிடிவி அதிகம் உள்ள பெருநகரங்களின் பட்டியலில் சென்னை முதலிடம்

வளர்ச்சி விகிதத்தில் லண்டன், பெய்ஜிங் நகரங்களை பின்னுக்குத் தள்ளி உலகிலேயே சிசிடிவி அதிகம் உள்ள பெருநகரங்களின் பட்டியலில் சென்னைக்கு முதலிடம்.

இன்று சென்னையில் 2 லட்சத்து 80 ஆயிரம் சிசிடிவி கேமராக்கள் உள்ளன. சென்னையில் ஒரு சதுர கிலோ் மீட்டருக்கு 657 சிசிடிவி கேமராக்கள் இருக்கின்றன.

இரண்டாம் இடத்தில் ஹைதராபாத் உள்ளது. ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 480 சிசிடிவி கேமராக்கள் ஹைதராபாத் நகரத்தில் உள்ளன.



## பாட்டி வைத்தியம்

### Patti Vaithiyam

### வாயு தொல்லை நீங்க:

♦ மிளகை பொடி செய்து 50 கிராம் எடுத்து, 2 டம்ளர் நீரில் சேர்த்து 20 நிமிடங்கள் நன்றாக காய்ச்சி, அந்த நீரை வடிகட்டி, கால் டம்ளர் அளவு என மூன்று வேளை அருந்தினால் வாயுத் தொல்லை குணமாகும்.

♦ வாய்வு தொல்லைக்கு வாழைப்பழம் மிகச் சிறந்த பலனை தரும். வாய்வுத் தொல்லை இருப்பவர்கள் உடனடியாக வாழைப் பழம் சாப்பிட்டால் கட்டுப்படுத்தி விடும்.

♦ தேங்காய் துருவல் அல்லது தேங்காய் நீர் மற்றும் தேங்காய் பாலை குடிப்பதால் வாய்வு தொல்லை குணமாகும்.

♦ ஆப்பிளைப் போன்ற சத்துக்களுடன் இருக்கும் பேரிக்காயும் வாய்வுத் தொல்லையிலிருந்து விடுதலை தருகிறது. ஜீரண சக்தியையும் தூண்டும். தினமும் 1பேரிக்காய் சாப்பிட்டால் வாய்வுத் தொல்லை உண்டாகாது.

## இயற்கை அழகு குறிப்பு

*உங்கள் முகம் பளப்பளக்க கற்றாழை பேஸ்பேக்...*



இயற்கையாக அழகை அதிகரிக்க இயற்கையே பல பொருள்களை அள்ளித் தந்திருக்கிறது. அந்த வகையில் சருமத்தை பளிச்சென்று மாற்ற கற்றாழை ஒரு சிறந்த பொருளாக விளங்குகிறது. கற்றாழை ஆரோக்கியம் பிரச்சனைக்கு மட்டுமல்லாமல், அழகு சாதன பொருளாகவும் விளங்கிறது. கற்றாழையை பயன்படுத்தி பல வகையான அழகு சார்ந்த பிரச்சனைகளை சரி செய்யலாம்.

சருமம் பொலிவு பெற :-

ஒரு சுத்தமான பவுலில் 1 ஸ்பூன் முல்தானி மெட்டி, 2 ஸ்பூன் கற்றாழை ஜெல் மற்றும் பால் அல்லது ரோஸ் வாட்டர் 1 ஸ்பூன் ஆகியவற்றை சேர்த்து இந்த கலவையை சருமத்தில் நன்றாக அப்ளை செய்து பிறகு 20 நிமிடம் கழித்து சருமத்தை குளிர்ந்த நீரால் கழுவ வேண்டும். இவ்வாறு வாரத்தில் இரண்டு முறை செய்து வர பொலிவற்ற சருமம் பளிச்சென்று பளபளக்கும்.

பளிச்சென்று சருமம் மாற :-

வெயிலில் அலைந்து திரியும் பலருக்கு சருமம் கருமையாக காணப்படும். எனவே சருமம் பளிச்சென்று மாற சுத்தமான பவுலில் 1 ஸ்பூன் கற்றாழை, 1/4 ஸ்பூன் மஞ்சள் தூள், 1 ஸ்பூன் தேன் மற்றும் 1 ஸ்பூன் ரோஸ் வாட்டர் சேர்த்து சருமத்தில் அப்ளை செய்ய வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் முக கருமை நீங்கி சருமம் பளிச்சென்று காணப்படும். மேலும் முகத்தில் தேவை இல்லாத இடங்களில் வளரும் முடிகள் உதிர்ந்து கொட்டிவிடும்.

## வண்ணக்கோலம்





Devika Marimuthu,
Thiruvanmiyur

## உலகிலேயே மிக உயரமான மகா சனீஸ்வர பகவான்



தமிழ்நாட்டில் விழுப்புரம் மாவட்டம் வானூரை அடுத்த மொரட்டாண்டி கிராமத்தில் உலகிலேயே 27 அடி உயரம் கொண்ட விஸ்வரூப மகா சனீஸ்வர பகவான் கோவில் அமைந்துள்ளது. இக்கோவிலில் ஒரு கரத்தில் வில், மறுகரத்தில் அம்பு, மற்ற இரு கரங்கள் அபயவரத முத்திரையோடு சனி பகவான் அருள்கிறார்.

54 அடி உயர விநாயகர் சிலையும், 12 ராசிகளையும் சனிபகவானுக்கு எதிரே நிறுவப்பட்டுள்ளது. திண்டிவனத்திலிருந்து புதுச்சேரி செல்லும் வழியில் இந்த பிரம்மாண்ட சனீஸ்வரன் திருத்தலம் அமைந்துள்ளது.






## மெகந்தி டிசைன்



## நம்மை உயர்த்தும் ஏழு அதிசயங்கள்

7.பதவியிலும் பணிவு

6.துன்பத்திலும் துணிவு

5.கோபத்திலும் பொறுமை

4.செல்வத்திலும் எளிமை

3.ஏழ்மையிலும் நேர்மை

2.தோல்வியிலும் விடாமுயற்சி

1.வறுமையிலும் உதவிசெய்யும் மனம்








# துன்பங்கள் நீக்கியருளும் திருவெண்ணெய்நல்லூர் கோவில்

*சிவபெருமானின் திருப்பாதம் பதிந்த பெரும் புனிதமான புராதனமான திருத்தலம், திருவெண்ணெய்நல்லூர். இந்த கோவில் வரலாற்றை அறிந்து கொள்ளலாம்.*

சிவபெருமானின் திருப்பாதம் பதிந்த பெரும் புனிதமான புராதனமான திருத்தலம், திருவெண்ணெய்நல்லூர்.

ஒருமுறை திருக்கயிலாயத்தில், பளிங்கு போல் காட்சியளித்த பனிப்படலத்தில் தன் கண்களைத் திறந்து நோக்கினார், சிவபெருமான். அதில் அவரது பிம்பம் தெரிந்தது. தன் எதிரில் பிரதிபலித்த அந்த பிம்பத்தின் அழகில் மயங்கிய ஈசன், அதை நோக்கி "சுந்தரா வா" என்றார். உடனே அந்த பிம்பம் உயிர் பெற்று, சிவபெருமானை நோக்கி வந்தது. அவருக்கு சுந்தரர் என்று பெயரிட்டு, அணுக்கத் தொண்டராய் அருகில் அமர்த்திக் கொண்டார் சிவன்.

திருப்பாற்கடல் கடைந்தபோது, அதில் இருந்து வெளிப்பட்ட ஆலகால விஷத்தை, பந்து போல உருட்டி சிவபெருமானிடம் கொண்டு வந்து கொடுத்தவர், சுந்தரர் தான். ஆதனால் தான் அவரது பெயர் 'ஆலால சுந்தரர்' என்றானது.

சிவபெருமான் சாப்பிட்ட விஷம் அவரது கழுத்தில் நின்றது. அது வெம்மையை தராமல் இருக்க, பெண்ணை ஆற்றின் கரையில் பசுவின் வெண்ணெயால் கோட்டை அமைத்து, அதனுள் பஞ்சாக்கினி வளர்த்து, அதன் நடுவில் தவம் இயற்றினார். அந்த திருத்தலமே திருவெண்ணெய் நல்லூர் என்றானது.

ஒருநாள் சிவபூஜைக்காக பூப்பறிக்க, கயிலையில் இருந்த நந்தவனத்திற்கு சென்றார் சுந்தரர். அப்போது அங்கே பார்வதியின் தோழியர்களான கமிலினி, அனிந்ததை ஆகியோர் மீது சுந்தரருக்கு ஈர்ப்பு உண்டானது. இதனை அறிந்த ஈசன், தம் அடியவர்களான ஆலால சுந்தரர், கமிலினி, அனிந்ததை ஆகிய மூவரையும் பூலோகத்தில் பிறப்பெடுத்து காதல் வாழ்வை வாழ்ந்து, பின்னர் திருக்கயிலாயம் வந்தடையும்படி அருளினார்.

உடனே சுந்தரர் ஈசனை வேண்டி, "தன்னை பூலோகத்தில் தக்கச் சமயத்தில் தடுத்தாட் கொள்ள வேண்டும்" என்று வேண்டினார். ஈசனும் அதற்கு இசைந்தார்.

இதையடுத்து திருநாவலூரில் சடையனார் - இசைஞானியார் தம்பதிகளுக்கு ஆதிசைவ மரபில் நம்பிஆரூரர் எனும் திருநாமத்தில் சுந்தரர் பிறந்தார். சிறு வயதில் சுந்தரரை பார்த்த, அந்தப் பகுதி மன்னனான நரசிங்கமுனையர், அவரை தன்னுடைய அரண்மனையிலேயே வளர்த்து வந்தார். சுந்தரருக்கு 16 வயதான போது, புத்தூரில் சடங்கவி சிவாச்சாரியாரின் மகளை அவருக்கு மணம் செய்து வைக்க பேசி முடித்தனர்.

சுந்தரருக்கு கொடுத்த வாக்கின்படி, அவரை தடுத்தாட்கொள்ள வேண்டிய தருணம் சிவபெருமானுக்கு வந்தது. அதன்படி திருமணம் நடைபெற இருந்த இடத்திற்கு ஓர் அந்தணக் கிழவராக உருவெடுத்து வந்தார் சிவபெருமான்.

அங்கு கூடியிருந்தவர்கள் முன்னிலையில் நம்பி ஆரூரரை காட்டி, "இவன் என் அடிமை. இவனை என்னோடு அனுப்புங்கள். மணம் செய்து வைக்காதீர்கள். இவன் பாட்டன் எழுதிக் கொடுத்த ஓலையில், அவனும், அவனது வழிவழி சந்ததியினரும் இந்த திருவெண்ணெய் நல்லூர் அந்தணனுக்கு அடிமை" என்று கூறியதோடு, அதற்கான ஓலையையும் காட்டினார். அதைக் கேட்ட சுந்தரர், "உமக்கு என்ன பித்து பிடித்திருக்கிறதா?" என்று கேட்டவாறே, முதியவரின் கையில் இருந்த அடிமை ஓலையை பிடுங்கி, படித்துக்கூட பார்க்காமல் கிழித்து எறிந்தார். முதியவருக்கும், சுந்தரருக்கும் வழக்கு மூண்டது. "இங்கே எனக்கு நீதி கிடைக்காது. ஏனது ஊரான திருவெண்ணெய் நல்லூருக்குச் செல்வோம். அங்கு வழக்காடு மன்றத்தில் மறையோர்கள் முன்னிலையில் உண்மையை நிரூபிக்கிறேன்" என்று கூறி சுந்தரரை தன்னுடன் அழைத்துச் சென்றார் முதியவர். சுந்தரரோ, "அப்படியோர் வழக்கு இருக்குமெனில், அதை முடித்த பின்னரே இங்கு வந்து மணம் முடிப்பேன்" எனச் சபதம் இட்டு முதியவருடன் சென்றார். பின்னர் வழக்கு திருவெண்ணெய்நல்லூரில் மறையவர்கள் முன்னிலையில் நடந்தது.

அப்போது சுந்தரரின் பாட்டனார் கையெழுத்திட்ட பழைய ஓலைச் சுவடிகளை கொண்டு வந்து சரிபார்த்தனர். ஏனவே அங்கிருந்த மறையவர்கள், சுந்தரரை அந்த முதியவருக்கு அடிமை என தீர்ப்பளித்தனர்.

இதனால் வழியின்றி அந்த முதியவருடன் சென்றார், சுந்தரர். முதியவர் வேடத்தில் வந்த சிவபெருமான் சுந்தரரை திருவெண்ணெய்நல்லூர் ஆலயக் கருவறைக்குள் கைப்பிடித்து அழைத்துச் சென்றார். அங்கு சிவலிங்கத்திற்கு முன்பாக தமது பாதக் குறடுகளைக் கழற்றி விட்டுவிட்டு, சிவலிங்கத்திற்குள் சென்று மறைந்தார், முதியவர்.



கிழவராக வந்து சுந்தரரோடு வழக்கு செய்த சிவபெருமான் லிங்கத்தில் ஐக்கியமாகும் முன் தான் அணிந்திருந்த காலணி பாதுகையை கருவறைக்கு முன் கழற்றி வைத்துவிட்டு லிங்கத்தில் ஐக்கியமானார் அப்பாதுகைகள் இன்னும் இத்தலத்தில் உள்ளது.

சுந்தரர் திகைப்பில் ஆழ்ந்து போனார். அப்போது கருவறைக்குள் இருந்து சிவபெருமான் தோன்றி, சுந்தரரின் முற்பிறவியையும், இப்போதைய பிறவியையும் பற்றி விளக்கிவிட்டு மறைந்தார்.

சிவபெருமானின் மீது, பித்தா பிறை சூடி.." தன்னுடைய முதல் பதிகத்தை பாடினார் சுந்தரர்.

சுந்தரருடன் பஞ்சாயத்துச் சபையில் ஈசன் வழக்காடிய மண்டபம் இன்றும் திருவெண்ணெய்நல்லூரில் உள்ளது. சடையப்ப வள்ளல், கவிச்சக்கரவர்த்தி கம்பரை ஆதரித்துப் போற்றிய பவித்திரமான புண்ணிய பூமி இதுவாகும்.



கிருபாபுரீஸ்வரர் ஆலயம்

இத்தல ஈசனின் திருநாமம் கிருபாபுரீஸ்வரர் என்பதாகும். இத்தல இறைவனுக்கு தடுத்தாட்கொண்ட நாதர் என்ற பெயரும் உண்டு. இத்தல ஈசனின் சன்னிதியில் 11 திங்கட்கிழமைகள் கருவறை தீபத்தில் பசு நெய் சேர்த்து வந்தால், நம்முடைய பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும். இங்குள்ள ஈசனின் பாதக் குறடுகளுக்கு வில்வார்ச்சனை செய்து வழிபட வேண்டும் என்றும் சொல்கிறார்கள்.


இத்தல பலிபீடத்தின் நேர் உயரத்தில், சுந்தரருக்கு ஈசன் ரிஷபாரூடராகக் காட்சிகொடுத்த விமானக் கோவில் உள்ளது. அதற்கு எதிரில் கீழே கையில் ஓலைச்சுவடியுடன் சுந்தரர் உள்ளார். ஆடி மாத சுவாதி நட்சத்திரத்தில் சுந்தரர் குருபூஜை விழா இங்கு இரண்டு நாட்கள் வெகு சிறப்பாகக் கொண்டாடப்படும். விழா நாளில் சுந்தரரின் திருமண உற்சவம், ஈசன் சுந்தரரின் திருமணத்தை தடுத்தாட்கொண்டது, சுந்தரருக்கு ஈசன் காட்சி கொடுத்தது, திருக்கயிலாயம் செல்லுதல் போன்ற நிகழ்வுகள் நடைபெறும்.

மகாசிவராத்திரி நாளில் விரதமிருந்து இத்தலத்தில் தங்கியிருந்து ஈசனை மனமுருகி வழிபட்டால் வாழ்வில் தீவினைகள் அகன்று நல்லனவெல்லாம் வந்தடையும். சிவராத்திரி அன்று நள்ளிரவில் இத்தல மூலவர் கருவறைச் சுற்றின் பின்புறமுள்ள லிங்கோத்பவருக்கு சிறப்பு அபிஷேகங்கள் நடைபெறுகிறது.

விழுப்புரத்தில் இருந்து அரசூர் செல்லும் வழியில் திருவெண்ணெய் நல்லூர் அமைந்துள்ளது. இத்தலத்தின் அருகில் அப்பரின் பாடல் பெற்ற திருத்தலமான திருமுண்டீஸ்வரம் சிவலோகநாதர் திருக்கோவிலும் அமைந்துள்ளது.

# Entertainment Corner

## குறுக்கெழுத்துப் புதிர்




இடமிருந்து வலம்:

1. தேசிய பறவை வண்டி ஏறி வருகிறது (3, 4)
4. கடற்கரையில் ஒன்றின் பின் ஒன்றாக வந்து கொண்டே இருக்கிறது இந்த channel (5)
6. அழகு குறைந்தபோதும் அறிவழகன் மூளைக்காரன் (3)
7. குழு அமைத்து உடுத்திக்கொள் (2)
9. சோப்பு கொண்டு அடிக்கடி இப்படிச் செய்தல் கிருமிகளை நீக்கும் (1,5)
11. சிலம்பு தேய்ந்து சிலம்பரசன் ஆகிவிட்டது (3)
13. பொருளின் மதிப்பு (2)
14. படத்தில் இருக்கும் பூச்சியின் பெயர் (3) 

மேலிருந்து கீழ்:

1. ஊட்டியை இப்படியும் பெருமையாகச் சொல்வார்கள் (5,3)
2. வெயிலா மழையா புயலா என்று நமக்கு இப்படிச் சொல்வார்கள் (3, 4)
3. துணியையும் காகிதத்தையும் வெட்டப் பயன்படும் (7)
5. மாமிசம் உண்ணாதவர்களை இப்படியும் சொல்லலாம் (3)
8. தமிழில் 247 இருக்கிறது (4)
10. இளைய சகோதரன் (3)
12. உலகம் (2)

### சென்ற வார குறுக்கெழுத்து புதிருக்கான விடைகள்

இடமிருந்து வலம்:
1. அவன் 3. புடகு 5. சரி 6. சுமார் 7. தாகம்8. சம்பளம் 10. நாட்டுப்பண்

மேலிருந்து கீழ்:
2. வருமானம் 3. பரிதாபம் 4. குறும்பு

### சென்ற வார சொல் விளையாட்டிற்க்கான விடைகள்

1. நகம் 2. ஊனம் 3. நன்றி 4. ஊக்கம் 5. கறி 6. கனம் 7. கன்னம் 8. கன்னன் 9.நனம் 10. ஊறி

உங்களின் திறமைகளை வெளிப்படுத்த, உங்கள் ஓவியம், கைத்திறம், கோலம் மற்றும் கவிதைகளை உங்களின் புகைப்படத்தோடு சேர்த்து வாட்சப் அல்லது மெயில் மூலம் எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.

Publisher : R.Rajesh
Editor : Saranya Rajesh
Photographs : Live View Media
Marketing manager : P.Ravikumar
Designer : S.Aswini

Express Velachery
Weekly - News Paper
37F, Velachery Main Road, Vijayanagar, Velachery, Chennai - 600042.
Timing: Monday to Friday 9.30 am to 6.00 pm Saturday 9.30 am to 12.30
044-42077325 / 7305837388
E-mail : expressvelachery@gmail.com

DISCLAIMER

Readers are advised to make appropriate enquiries while responding to advertisements in these columns. Express Velachery does not vouch for any claims made by the Advertisers. The Printers, Publishers, Editor and Owners of Express Velachery shall not be held responsible/ liable for any consequences, in case such claims are found to be false.

## தமிழோடு விளையாடு!

### வார்த்தை தேடு

கட்டத்தில் உள்ள எழுத்துக்களில் 10 செடி மூலிகைகளின் பெயர்களை கண்டுபிடியுங்கள்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஈ | ஒ | ர | கு | தை | த் | ம | ஊ | ஆ | உ |
| ஓ | ஏ | ண | ம் | ஐ | ஓ | அ | ஐ | ஏ | தி |
| ஏ | ஆ | க | ப | லி | ல் | ம | க | நா | ர |
| ஏ | ஐ | ள் | கொ | அ | ஈ | எ | ஊ | அ | வே |
| ஓ | ஓ | ளி | ட | த் | ஆ | ஆ | தி | ஔ | ங் |
| அ | சி | ஐ | ளி | தி | ஔ | ஊ | ந் | ஔ | கை |
| ஏ | ள | ஒ | உ | ஒ | எ | டை | ந | சா | அ |
| அ | து | இ | எ | எ | ஐ | தோ | க | க | எ |
| உ | ஈ | ஈ | ஓ | ஒ | ஓ | டா | நா | ச | ஓ |
| சி | றி | ய | ந | ங் | கை | ஆ | ஔ | க | ஒ |

### சென்ற வார வார்த்தை தேடு விளையாட்டிற்க்கான விடைகள்
15 கடல் விலங்குகளின் பெயர்கள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ச | கி | ளை | வ | த | தை | த் | ந | ஆ | கொ |
| ங் | ளி | ஐ | ஈ | ஈ | ஆ | ஔ | இ | எ | டு |
| க | ஞ் | அ | ஊ | ஓ | ஒ | ஏ | ஔ | அ | வா |
| ரா | சி | வி | ரா | ல் | லை | த | மு | அ | மீ |
| ஊ | ல் | ஐ | ஈ | னை | யா | ற் | ட | க | ன் |
| இ | கெ | ளு | த் | தி | ஒ | ஒ | டை | ஔ | சி |
| ஆ | ஊ | பா | ல் | சு | றா | லி | ண் | ஈ | பா |
| ஊ | தி | ர | ளி | இ | ஆ | தி | கெ | ஏ | ற் |
| ஐ | வ | ஞ் | ச | ர | ம் | த் | உ | ஓ | ட |
| இ | ஊ | ஊ | அ | எ | உ | நெ | ஏ | இ | க |

### இணைச் சொற்களை கண்டுபிடியுங்கள்

கனலி

__________ __________

__________ __________

பகலவன் இந்திரன் கதிரவன்

சந்திரன் சூரியன் ஆதித்தன்

## விடுகதை விளையாட்டு

1. உடம்பெல்லாம் சிவப்பு, அதன் குடுமி பச்சை -அது என்ன?
2. சிறு தூசி விழுந்ததும் குளமே கலங்கியது -அது என்ன?
3. ஓர் அரண்மனையில் 32 காவலர்கள் -அது என்ன?
4. அடிக்காமல் திட்டாமல் கண்ணீரை வர வைப்பான் -அவன் யார்?
5. உடம்பு இல்லாத அவனுக்கு தலை உண்டு. பூ உண்டு -அவன் யார்?

## எக்ஸ்பிரஸ் ஜோக்ஸ்.........



நோயாளி : "டாக்டர் நீங்க சொன்ன மாதிரி அல்வா சாப்பிடுகிறேன். ஆனால் தொப்பை குறையவே மாட்டேங்குது?"

மருத்துவர் : "அய்யோ கடவுளே தினமும் அளவா சாப்பிடுங்கனு சொன்னது உங்க காதுல தப்பா விழுந்துடுச்சி..."

மருத்துவர் : தண்ணியை காய்ச்சி வடிகட்டி குடிக்க சொன்னனே செஞ்சிங்களா?

நோயாளி : அப்படி செஞ்சதுக்கு தான் போலீஸ்ல புடிச்சிட்டு போயிட்டாங்க டாக்டர்..!



நோயாளி : டாக்டர் என் உடம்புக்கு என்ன பன்னுதுன்னே சொல்லத் தெரியலை... பயமா இருக்கு...

மருத்துவர் : டோன்ட் ஒர்ரி... எனக்கு கூட எப்படி ஆபரேஷன் பண்ண போறேன்னு சொல்லத் தெரியலை... நான் பயப்படறேனா...

மருத்துவர் : "ஆபரேஷன் முடிந்து நீங்க நடந்தே வீட்டுக்கு போலாம்."

நோயாளி : ஏன் டாக்டர் "ஆட்டோவுக்கு கூடக் காசு இருக்காதா டாக்டர்?"

## அறிவியல் தகவல்

### பசையாகும் பிளாஸ்டிக் குப்பை!

வீணாகும் பிளாஸ்டிக் கழிவுகளை மறுசுழற்சி செய்யலாம். ஆனால், "மேற்சுழற்சி" செய்ய முடியுமா? முடியும். பிளாஸ்டிக்கை மேற்சுழற்சி செய்து, பசைகளை தயாரிக்க முடியும். இதற்கான யுக்திகளை உருவாக்கியுள்ளனர், அமெரிக்காவிலுள்ள, கலிபோர்னிய பல்கலைக் கழக விஞ்ஞானிகள்.

உலோகங்கள், காகிதம் போன்றவற்றை மறுசுழற்சி செய்வதன் மூலம், மதிப்புக் கூட்டப்பட்ட புதிய பொருட்களை உருவாக்க முடியும். எனவே, பிளாஸ்டிக்கை மறுசுழற்சி செய்தால், முன்பு இருந்ததைவிட மதிப்புக் குறைந்த பொருட்களையே உருவாக்க முடியும்.

இந்த முறையை பயன்படுத்தி, பிளாஸ்டிக்கில் இருந்து, பாலிஎத்திலினை பிரித்தெடுத்து, சில புதிய வினையூக்கிகள் மூலம் பசைகளை தயாரிக்கலாம்.

இந்த பசை, செயற்கை இடுப்பு மற்றும் மூட்டுக்களை பொருத்துகையில், பயன்படுத்தலாம். மேலும், பிளாஸ்டிக் மற்றும் உலோகப் பொருட்களை ஒட்டவும் பயன்படும். மற்ற பசைகளைவிட மேற்சுழற்சி பிளாஸ்டிக் பசைக்கு, 20 சதவீதம் கூடுதல் ஒட்டும் தன்மை உள்ளதாக காலிபோர்னியா பல்கலைக்கழக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

## அறுசுவை சமையல்

### புதினா கேழ்வரகு பக்கோடா

**தேவையானவை :**

பொடியாக நறுக்கிய புதினா - 1 கப்
கேழ்வரகு மாவு - 2 கப்
கடலை மாவு - 4 டீஸ்பூன்
அரிசி மாவு - 4 டீஸ்பூன்
உப்பு - தேவைகேற்ப
கறிவேப்பிலை - சிறிதளவு
பொடியாக நறுக்கிய கொத்தமல்லி - சிறிதளவு
மிளகாய் தூள் - இரண்டு டீஸ்பூன்
தண்ணிர் - சிறிதளவு
எண்ணெய் - தேவையான அளவு

**செய்முறை :**

❖ முதலில் ஒரு பாத்திரத்தில் கேழ்வரகு மாவு, நறுக்கிய புதினா, கடலை மாவு, அரிசி மாவு, உப்பு, கறிவேப்பிலை கொத்தமல்லி, மிளகாய் தூள், சிறிதளவு தண்ணிர் தெளித்து நன்றாக கெட்டியாக பிசைந்து கொள்ளவும்.

❖ இதன் பின்னர் கடாயில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும் பிசைந்த மாவை பக்கோடா போட்டு பொன்னிறமாக வந்தவுடன் எடுத்து பரிமாறவும்.

# WINNERS OF TALENT CABIN'S ONLINE POT PAINTING COMPETITION

## CATEGORY - I

I PRIZE



M. VIKASHINI SHRI
Pre kg
Moms Vidya Mandir
S Kolathur

I PRIZE



B. SUBIKSHA
UKG
AGM Hr. Sec. School
Velachery

II PRIZE



G.V. AISHWARYA
LKG
Marg Vidhyalaya
Madipakkam

III PRIZE



N. DHAYANANDHA GURUNATH
UKG
AGM Hr. Sec. School
Velachery

CONSOLATION PRIZE



K.P. KRISH
UKG
Marg Vidhyalaya
S Kolathur

## CATEGORY - II

I PRIZE



P. ANUSHKA SANTHOSH
I Std
Marg Vidhyalaya
Madipakkam

II PRIZE



B.R. VIBNA
I Std
P.S.Senior Sec.School
Saidapet

III PRIZE



ANANYA ARVINDHAN
I Std
Sunshine Senior
Secondary School
Velachery

III PRIZE



L. PAMATHY
I Std
D.A.V Public School
S Kolathur

CONSOLATION PRIZE



N.AKHILAN
I Std
Marg Vidhyalaya
Velachery

## CATEGORY - III

I PRIZE



S. SREELAKSHMI
IV Std
Vels Vidhyashram
Madipakkam

II PRIZE



R. DEEPIKA SREE
IV Std
Marg Vidhyalaya
Madipakkam

III PRIZE



S. ADITHYA
III Std
Marg Vidhyalaya
Madipakkam

III PRIZE



B.R. JAI VAIBAV
IV Std
P.S.Senior Sec.School
Saidapet

CONSOLATION PRIZE



K.P. JANANI
IV Std
Marg Vidhyalaya
S Kolathur

## CATEGORY - IV

I PRIZE



B. NARASIMMA AMUTHAN
V Std
Balagurukulam Nursery &
Primary School
Madhurai

II PRIZE




R. JIVITESH
VI Std
Marg Vidhyalaya
Madipakkam

III PRIZE



G.V. NITHISH
VI Std
Marg Vidhyalaya
Madipakkam

III PRIZE



R. ABINAYA
V Std
Chaitanya Tecno School
Tambaram










Owned & Published R.Rajesh, No.17, 100ft, By Pass Road, Velachery, Ch-42. Printed by S.Ali Mohammed Sayeed, Mo.22/49, Subedar Hussain Street, Border Thottam, Royapettah, Ch-14. Editor: SARANYA RAJESH